DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**<u>அமர்வு வழக்கு எண். 268/2022</u>**

**அ.சா.– 3**

| | |
|---|---|
| பெயர் : திரு. சரவணன் | கிராமம்: |
| த/பெ. : திரு. கிருஷ்ணன் | தாலூக்கா : |
| வயது : | ஜாதி : |
| தொழில்: | மதம் : |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது மாவட்ட கூடுதல் நீதிபதி அவர்கள், Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the 21st day of February, 2024.

( 1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜர் இல்லை. 2ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு –317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல்விசாரணை</u>**:–

நான் அம்மாபேட்டையில் குடியிருக்கிறேன். அ.சா.–1 என் பெரியம்மா, அ.சா.–2 என் அக்கா. இந்த வழக்கில் இறந்துபோன பிரபு என் அண்ணன். 1வது எதிரி ஷாலினி என் அக்கா மகள். 2வது எதிரியை தெரியாது. இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**<u>குறுக்குவிசாரணை (அரசு தரப்பில்)</u>**:–

02.08.2021ம் தேதி இரவு சுமார் 1.30 மணியளவில் அ.சா.–1 என் பெரியம்மா துளசி எனக்கு போன் செய்து வீட்டில் திருடன் யாரோ வந்துவிட்டார் என்றும், உடனே வருமாறு கூறினார் என்றும், நான் வீட்டிற்கு சென்று பார்த்தபொழுது என் அக்கா மருமகன் பிரபு வலது உள்ளங்கையிலும் வலது காதிலும் இரத்தக்காயத்துடன் கிடந்தார் என்றும், 108 ஆம்புலன்ஸ் வந்தது என்றும், ஆம்புலன்சில் உள்ளவர்கள் பிரபு இறந்துவிட்டதாக கூறினார்கள் என்றும், பின்பு அம்மாபேட்டை

காவல்நிலையத்திற்கு சென்று என் நண்பர் கோபி புகார் எழுதி அதில் அ.சா.–1 துளசி கையொப்பமிட்டு கொடுத்தார் என்றும், என் அக்கா மகள் 1வது எதிரி எவ்வாறு சம்பவம் நடந்தது என்பது குறித்து முன்னுக்கு பின் முரணாக கூறியதால் 1வது எதிரி 2வது எதிரியுடன் சேர்ந்து பிரபுவை கொலை செய்திருக்கலாம் என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்பொழுது 1வது எதிரி என் அக்கா மகள் என்பதால் அவரை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை (எதிரிகள் தரப்பில்)**:– இல்லை.

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண். 268/2022**

**அ.சா.– 4**

| | |
|---|---|
| பெயர் : திரு. அரவிந்த்குமார் | கிராமம்: |
| த/பெ. : திரு. ரமேஷ் | தாலுக்கா : |
| வயது : | தொழில்: |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது மாவட்ட கூடுதல் நீதிபதி அவர்கள், Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the 21st day of February, 2024.

( 1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜர் இல்லை. 2ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு –317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல்விசாரணை**:–

நான் அம்மாபேட்டை, மார்க்கெட் தெருவில் குடியிருக்கிறேன். IT கம்பெனியில் பணிபுரிகிறேன். அ.சா.–1 மற்றும் 1வது எதிரியை தெரியாது. பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள கையொப்பங்கள் மட்டும் என்னுடையவை. அவை முறையே **அ.சா.ஆ.– 2 மற்றும் 3**. அவற்றில் உள்ள விவரங்கள் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**குறுக்குவிசாரணை (அரசு தரப்பில்)**:–

இந்த வழக்கு சம்மந்தமாக அம்மாபேட்டை காவல்நிலைய ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும், கடந்த 03.08.2021ம் தேதி அதிகாலை 4.45 மணிக்கு ஆய்வாளர் சம்பவ இடத்தை என் முன்பும் சாட்சி சுரேஷ் முன்பும் பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகஜரில் நாங்கள் இருவரும் கையொப்பமிட்டோம் என்றும், பின்பு காலை 5.30 மணிக்கு அம்மாபேட்டை மார்க்கெட் தெரு கதவு எண். 17/18 அ.சா.–1

துளசியின் வீட்டு படுக்கை அறையிலிருந்து ஆய்வாளர் இரத்தக்கறை படிந்த வெளிர் நீலம் வெளுத்த நிலையில் ஒரு துண்டு, இரத்தக்கறை மற்றும் மிளகாய் பொடி கறை படிந்த வெளிர் பச்சை பிரவுன் டிசைன் பூ போட்ட Ashoka என்று பெயர் பதிவு செய்யப்பட்ட மெத்தை விரிப்பு, இரத்தக்கறை படிந்த மஞ்சள் பிரவுன் கோடுபோட்ட துணிகவருடன் உள்ள தலையணை ஒன்று, இரத்தக்கறை படிந்த சூரியகாந்தி பூ போட்ட SAM NO.1 PREMIUM RICE என்ற அரிசி பையில் வெளிர் நிற கத்தரிப்பூ, சிவப்பு மஞ்சள் கலந்த பை அதனுள் தலையணை ஒன்று ஆகியவற்றை மகஜரில் எங்கள் முன்னிலையில் கைப்பற்றியதாகவும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் சுரேசும் கையொப்பமிட்டோம் என்றும், தற்பொழுது எதிரிகளை காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்குவிசாரணை(எதிரிகள் தரப்பில்)</u>**:- இல்லை.

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண். 268/2022**

**அ.சா.– 5**

| | |
|---|---|
| பெயர் : திரு. சுரேஷ் | கிராமம்: |
| த/பெ. : திரு. பிரபாகர் | தாலுக்கா : |
| வயது : | தொழில்: |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது மாவட்ட கூடுதல் நீதிபதி அவர்கள், Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the $21^{st}$ day of February, 2024.

( 1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜர் இல்லை. 2ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு –317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல்விசாரணை**:–

நான் அம்மாபேட்டை, No.2 மார்க்கெட் தெருவில் குடியிருக்கிறேன். IT கம்பெனியில் பணிபுரிகிறேன். அ.சா.–4 அரவிந்த்குமார் என் நண்பர். அ.சா.–1 மற்றும் 1வது எதிரியை தெரியாது. பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள கையொப்பங்கள் மட்டும் என்னுடையவை. அவை முறையே **அ.சா.ஆ.– 4 மற்றும் 5**. அவற்றில் உள்ள விவரங்கள் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**குறுக்குவிசாரணை (அரசு தரப்பில்)**:–

இந்த வழக்கு சம்மந்தமாக அம்மாபேட்டை காவல்நிலைய ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும், கடந்த 03.08.2021ம் தேதி அதிகாலை 4.45 மணிக்கு ஆய்வாளர் சம்பவ இடத்தை என் முன்பும் சாட்சி அரவிந்த்குமார் முன்பும் பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகஜரில் நாங்கள் இருவரும் கையொப்பமிட்டோம் என்றும், பின்பு காலை 5.30 மணிக்கு அம்மாபேட்டை

மார்க்கெட் தெரு கதவு எண். 17/18 அ.சா.–1 துளசியின் வீட்டு படுக்கை அறையிலிருந்து ஆய்வாளர் இரத்தக்கறை படிந்த வெளிர் நீலம் வெளுத்த நிலையில் ஒரு துண்டு, இரத்தக்கறை மற்றும் மிளகாய் பொடி கறை படிந்த வெளிர் பச்சை பிரவுன் டிசைன் பூ போட்ட Ashoka என்று பெயர் பதிவு செய்யப்பட்ட மெத்தை விரிப்பு, இரத்தக்கறை படிந்த மஞ்சள் பிரவுன் கோடுபோட்ட துணிகவருடன் உள்ள தலையணை ஒன்று, இரத்தக்கறை படிந்த சூரியகாந்தி பூ போட்ட SAM NO.1 PREMIUM RICE என்ற அரிசி பையில் வெளிர் நிற கத்தரிப்பூ, சிவப்பு மஞ்சள் கலந்த பை அதனுள் தலையணை ஒன்று ஆகியவற்றை மகஜரில் எங்கள் முன்னிலையில் கைப்பற்றியதாகவும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் அரவிந்த்குமாரும் கையொப்பமிட்டோம் என்றும், தற்பொழுது எதிரிகளை காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்குவிசாரணை(எதிரிகள் தரப்பில்)</u>**:– இல்லை.

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.

(சாட்சி CMP.No. 53/2023 ல் 10.02.2023 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை )

(சாட்சி CMP.No.192/2023 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் பிணையில் விடக்கூடிய பிடியாணை திரும்ப பெறப்பட்டு விசாரிக்கப்படுகிறார். )